BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# முப்பால் – நாலடியார் கல்வி அதிகாரம் ஒப்பீடு

# Comparison of the 'Education' Chapter in Muppaal and Naaladiyaar

**முனைவர் ஈஸ்வரன் பா**

உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர், அரசுபெண்கள் கல்லூரி, வழுதக்காடு, திருவனந்தபுரம் – 695 014.

கேரளம், இந்தியா

**Dr. Eswaran P**

Assistant Professor & Head, Department of Tamil, Govt. college for women, Vazhuthacaud, Thiruvananthapuram - 695014.

Keralam, India, Email ID: p.eswarpala@gmail.com Mobile no: 8608977892

**Abstract**

Education is an indispensable tool for human beings. If a person lacks education, it is not easy to clearly describe the difficulties, humiliations, and losses that he may encounter in life. It is not an exaggeration to say that numbers and letters play a vital role in human life. It is extremely rare for a person to achieve progress in life while neglecting and disregarding mathematics and literacy. Realizing the indispensability of education, the poet Thiruvalluvar states:

*"Numbers are called one thing and letters another; these two are the eyes of all living beings."*

*(Porutpaal – Chapter on Education, Kural 392 from Thirukkural)*

The eye is one of the most important organs of the human body. In the same way, numbers and letters are of great importance to human life. Education is what provides us with knowledge of mathematics, language (letters), and science. Recognizing the excellence and value of education, both Thiruvalluvar and the author(s) of Naladiyar have given a prominent place to education in their works. Therefore, this research article presents a comparative study of the chapter on Education found in the *Porutpaal* section of the Thirukkural and the chapter on Education found in the Naladiyar.

**Keywords:** Education, Muppāl, Naladiyar, Number, Letter, Life, Porutpaal.

**ஆய்வுக்சுருக்கம்**

கல்வி மனிதனுக்கு இன்றியமையாத ஒரு கருவியாகும். ஒருவனிடம் கல்வி இல்லையெனில் அவன் வாழ்வில் அடையக்கூடிய இன்னல்கள்,அவமானங்கள், இழப்புகள் இன்னதென்று அரிதியிட்டுக் கூறுதல் எளிதன்று. மனித வாழ்வில் எண்ணும் எழுத்தும் முக்கியமான பங்குவகிக்கின்றதென்றால் அது மிகையல்ல. கணிதத்தையும் எழுத்தையும் ஒருவன் இகழ்ந்து புறந்தள்ளிவிட்டு வாழ்வில் ஏற்றம் காண்பது என்பது அரிதிலும் அரிதான செயலாகும்.. அதனால்தான் இக்கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த பொய்யில் புலவன்,

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*

*கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (பொருட்பால். கல்வி அதிகாரம்.40. குறள்.392)*

என்று கூறியிருக்கிறான். 'கண்' என்பது மனிதனின் முக்கியமான உடலுறுப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பாக அமைகின்றது. அதுபோலத்தான் எண்ணும் எழுத்தும் மனித வாழ்விற்கு மிக முக்கியமானதாக அமைகிறன்றன. கணிதத்தையும் எழுத்தாகிய மொழியையும் அறிவியலையும் நமக்குத் தரவல்லது கல்வியாகும். இந்தக் கல்வியின் சிறப்பினை உணர்ந்த பெருநாவலரும் நாலடியாரும் தமது படைப்புக்களில் கல்விக்கு முக்கியமான இடத்தினைக் கொடுத்துள்ளனர். ஆகையால், உலகப்பொதுமறையில் பொருட்பாலில் இடம்பெற்றுள்ள கல்வி அதிகாரத்தையும் நாலடியாரில் இடம்பெற்றுள்ள கல்வி அதிகாரத்தையும் ஒப்பீடு செய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** கல்வி, முப்பால், நாலடியார், எண், எழுத்து,உயிர், பொருட்பால்.

**முன்னுரை**

சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அறம் அல்லது நீதிநூல்கள், அகநூல்கள், புறநூல்கள் என்று மூன்றுவகையாகப் பாகுபாடுசெய்யலாம். உலகப் பொதுமறையில் இடம்பெற்றுள்ள நீதிநூல்கள் மொத்தம் பதினொன்றாகும். அகநூல்கள் மொத்தம் ஆறுநூல்களாகும். புற நூல் ஒன்றாகும். நீதி நூல்கள் வரிசையில் முதல் இரண்டிடத்தில் இடம்பெறுவன திருக்குறளும் நாலடியாரும். இவ்விரண்டு நூல்களின் சிறப்பினை,

*"ஆலும் வேலும் பல்லுக்குறுதி,*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"*
*(தமிழ்ப் பழமொழி)*

என்றும்,

*"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"*
*(தமிழ்ப் பழமொழி)*

என்றும் பழமொழிகள் எடுத்துரைக்கின்றன. பண்டைய காலங்களில் நம்முன்னோர்கள் ஆலங்குச்சியையும் வேலங்குச்சியையும் வைத்துப் பல்துலக்கியுள்ளனர். பல்லும் வெண்மையாக உறுதியாக இருந்திருக்கிறது. ஆலும் வேலும் எப்படி பல்லிற்கு உறுதி அளிக்கிறதோ அதுபோல நாலடியாரும் திருக்குறளும் சொல்லிற்கு உறுதியளிக்கக்கூடிய நூல்களாக அமைகின்றது என்பதனை இப்பழமொழியானது நமக்கு எடுத்துரைக்கின்றது. ஆகையால், மனித வாழ்வின் ஏற்றத்திற்கு கல்வி என்பது அன்றும் இன்றும் என்றும் உறுதுணையாக இருக்கக்கூடியதாகும். எனவே, திருக்குறள் பொருட்பாலிலுள்ள கல்வி அதிகாரம் மற்றும் நாலடியார் பொருட்பாலில் இடம்பெற்றுள்ள கல்வி அதிகாரத்தினை ஒப்பீடு செய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திருக்குறள்**

1812- இல் முதன் முதலில் தஞ்சாவூரில் ஞானபிரகாசத்தால் அச்சில் ஏற்றப்பட்டது என்று அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். இதன்மூலம் இந்நூலின் பழமையை அறியலாம். இந்நூலிற்குப் பத்துப்பேர் சிறந்த உரை எழுதியிருந்தாலும் இவற்றில் சிறந்த உரையாக பரிமேலழகர் உரை காணப்படுகிறது. அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்புப்புடைய நூல் திருக்குறளாகும். திருவள்ளுவமாலையில் 53 சங்கப்புலவர்கள் 55 பாடல்களில் திருக்குறளின் சிறப்பினை உலகமறியச் செய்துள்ளனர்.

*"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்*
*குறுகத் தரித்த குறள்" (ஔவையார்)*

என்று ஔவையார் திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்துள்ளார். அந்த அளவிற்குக் திருக்குளில் கருத்துகள் இரண்டு அடிகளில் ஏழு சீர்களில் பொதிந்துகிடக்கின்றன என்பது நாடறிந்த உண்மையாகும்.

திருக்குறள் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்று நான்கு இயல்களாகவும், அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பால் என்று மூன்று பால்களாகவும், அறத்துப்பாலில் மொத்த அதிகாரங்கள் -38, பொருட்பாலில் மொத்த அதிகாரங்கள் -70 இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பாலில் மொத்த அதிகாரங்கள் -25 ஆக மொத்தம் 133 அதிகார்களாகவும் அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்கள் வீதம் மொத்தம் 1330 பாடல்களும் இடம்பெற்றிருப்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இப்பாக்கள் மனிதர்களின் அகவாழ்வியலுக்கும் புற வாழ்வியலுக்கும் பயன்படக்கூடிய அறக் கருத்துக்களையும் பண்பு நலன்களையும் நீதீ, நேர்மை போன்ற விழுமியங்களையும் எடுத்துரைக்கின்றன. இக்குறட் பாக்களில் இடம் பெறக்கூடிய செய்திகள் அனைத்தும் எக்காலத்திற்கும் எம்மதத்திற்கும் பொருந்துவதாய் இடம் பெற்றிருப்பதால்தான் இந்நூலிற்கு உலகப்பொதுமறை என்ற சிறப்புப்பெயரும் இருக்கின்றது. திருக்குறளுக்கு பொய்யாமொழி, தெய்வநூல், உத்தரவேதம், தமிழ்மறை, வாழ்வியல் வழிகாட்டி இதுபோன்று வேறுவேறு பெயர்க்காரணங்களும் பொருத்தமுடையதாகவே அமைகின்றது. வள்ளுவருக்கும் பொய்யில் புலவர், பெருநாவலர், மாதானுபங்கி என்று பல்வேறு பெயர்களும் காணப்படுகின்றன.

**நாலடியார்**

நாலடியார் ஒருவரால் எழுதப்பட்டதல்ல. சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்ட நூல் நாலடியாகும். சமண முனிவர்கள் எழுதிய பாடல்களில் 400 பாடல்களைத் தொகுத்து நாலடியார் என்று பெயரிட்டுள்ளனர். தொகுத்தவர் பதுமனார். நாலடியாரும் திருக்குறளைப் போலவே அறம் – 13 அதிகாரங்கள், பொருள் -24 அதிகாரங்கள், இன்பம் – 3 அதிகாரங்கள் என்று முப்பாலாகப் பகுத்தவரும் உரை கண்டவரும் தருமர். இந்நூலிற்கு நாலடி நானூறு, வேளாண் வேதம், குட்டி திருக்குறள் என்று பெயர்களும் உண்டு. திருக்குறளுக்கு இணையாக வைத்துப் பேசப்படக்கூடிய நுல். சமண சமயத் தத்துவங்களையும் நீதியையும் வெளிப்படுத்துகின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள ஒரே தொகைநூல் நாலடியார் மட்டுமே. இந்நூல் ஜி.யூ.போப்பால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள சிறப்பிற்குரியதாகும்.

**கல்வி கற்றல்**

மனித வாழ்வின் உயர்விற்குக் கூர்மையான ஒரு ஆயுதம் எதுவென்றால் அது கல்வியாகும். அதனால்தான் **"வாள் முனையைவிட பேனா முனையே கூர்மையான ஆயுதம்"** என்று தமிழ்ப்பழமொழி எடுத்துரைக்கின்றது.

மனிதனுடைய உடல் வலிமையைவிட அறிவு சார்ந்த, அறிவை வெளிப்படுத்தக்கூடிய பேனா முனை சிறந்தது என்பதை நமக்குப் பழமொழி உணர்த்துகிறது. அதனால்தான், கல்வியினை எவ்வாறு கற்றவேண்டும் என்பதை வள்ளுவம்,

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக".*
*(பொருட்பால். கல்வி அதிகாரம்.40. குறள்.391)*

படிக்க வேண்டிய நூல்களில் அறிவார்ந்த குற்றமற்ற நூல்களைப் படிக்கவேண்டும். பின்பு, படித்ததற்கு ஏற்றவகையில் மனிதப் பண்புகளோடு நடந்துகொள்ளவேண்டும் என்ற நீதியினை வள்ளுவம் எடுத்துரைக்கின்றது.

**கல்வியே அழகு**

உலகில் பொதுவாக 'அழகு' என்று சொன்னால் முதலில் நம் நினைவிற்கு வந்து கண்முன் காட்சியாகத் தோன்றுவது உடல் அழகுதான். மனிதர்கள் உடல் அழகைத்தான் உண்மையான 'அழகு' என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உடல் அழகானது நிலையில்லாதது. நிலையில்லாத இந்த மனித உடல் உடறுப்புக்களை அழகுபடுத்துவதால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. ஆனால், மனிதன் அறிவுள்ளவனாக இருப்பதற்கும் உலக அறிவினைத் தெரிந்து கொள்வதற்கும் கருவியாக விளங்குவது கல்வியே. இக்கல்வியே உண்மையான அழகு என்பதை,

*"குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,*
*மஞ்சள் அழகும், அழகல்ல – நெஞ்சத்து,*
*நல்லம்யாம், என்னும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு"*
*(கல்வி அதிகாரம். பா.எண்.131)*

என்று நாலடியார் எடுத்துரைக்கின்றனார். பெண்கள் பொதுவான தமது உடலுறுப்புகள் அழகு. அந்த உடலுறுப்புகளை அழகுபடுத்துவதுதான் உண்மையான அழகு என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையில் பெண்களுக்கான உண்மையான அழகு என்பது கல்விதான் என்பதை மேற்காணும் பாடலடிகளில் எடுத்துரைத்துள்ளார். பெண்கள் கல்வி பெற்றால் இந்த உலகில் சுயமாகத் தனித்து நின்று வாழமுடியும். சரிநிகர் சமமாய் பெண்கள் மதிப்புடன் நடத்தப்படுவார்கள் என்பதை உணர்ந்த நாலடியார் பெண்களுக்குக் கல்வியே முக்கியமான ஆயுதம் என்பதை வலியுறுத்துகின்றார்.

**உயிருக்கான முதன்மை கல்வி**

கணிதத்தையும் மொழியையும் முழுமையாகப் புறந்தள்ளிவிட்டு ஒரு சிறந்த நல்வாழ்வினை மனிதர்கள் மேற்கொள்ள இயலுமா என்பதை நன்கு சிந்திக்கவேண்டும். மனித உடலுறுப்புகளில் 'கண்' என்பது மிக முக்கியமான உடலுறுப்பாகும். அதுபோலத்தான் எண்ணும் எழுத்தும் மனித வாழ்விற்கு முக்கியமானதாகும். எண்ணையும் எழுத்தையும் கற்காதவர் முகத்தில் கண்கள் இருந்தும் அந்தக் கண் புண்ணிற்குச் சமம் என்று சாடுகின்றது வள்ளும்,

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*
*(பொருட்பால். கல்வி அதிகாரம்.40. குறள்.392)*

என்றும்,

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்*
*(பொருட்பால்".. கல்வி அதிகாரம்.40. குறள்.393)*

என்னும் குறட்பாக்கள் மூலம் எண்ணும் எழுத்தும் மனிதனுக்குக் கண்போன்றதாகும். எண்ணும் எழுத்துமாகிய கல்வியை கற்கவில்லையெனில் முகத்தில் கண்ணிருந்தாலும் அக்கண் புண்ணிற்கு ஒப்பானது என்று மிகவும் இழிவாகச் சாடுகின்றது வள்ளுவம். மேலும், கல்வியைக் கற்கவில்லையேல் கண்ணிருந்தும் கண்ணில்லாதவர்கள்போல் நடமாடும் சூழ்நிலை எற்படும் என்ற நடப்பியல் எதார்த்தத்தை வள்ளுவம் பன்னெடுங்காலத்திற்கு முன்பே சிந்தித்துள்ளதை அறியமுடிகின்றது.

**சிறந்த மருந்து கல்வி**

கல்வியானது இந்தப்பிறவிக்குரிய பொருள்கள் அனைத்தையும் தரக்கூடியது. அதுமட்டுமல்லாமல் பிற செல்வங்களைப்போல் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் வளரக்கூடியது கல்வி மட்டுமே. கல்வியைப் பெற்றவருக்கு புகழ் உண்டாகும். மனிதனுக்கு என்றாவது ஒருநாள் இறுதிக்காலம் வரும். ஆனால், ஒருவர் கற்ற கல்விக்கு எப்போதும் அழிவில்லை. இப்படிப்பட்ட கல்விதான் அறியாமை என்னும் இருளைப் போக்கக்கூடிய சிறந்த மருந்து என்பதை,

*"இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்;*
*தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;*
*எம்மை உலகத்தும் யாங்காணேம், கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து"*
*(கல்வி அதிகாரம். பா.எண்.132)*

என்னும் மேற்காணும் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. இதன் மூலம் நாலடியார் கல்வியைப் போல அறியாமையைப் போக்கக் கூடிய மருந்து வேறு ஒன்றுமில்லை. எந்த உலகத்திலும் கண்டதில்லை என்று உறுதிபட உரைக்கின்றார்.

**கல்வியும் திறமையும்**

விளைச்சல் தரக்கூடிய நல்ல நிலத்தில்தான் நெல் செழிப்பாக விளையும். ஆனால், உப்பானது உவர் நிலத்தில் விளைக்கூடியதாக இருந்தாலும் அறிவுடையோர்கள் உப்பின் பயன்பாடு கருதி நெல்லைக்காட்டிலும் உப்பிற்கு மிகுந்த மதிப்புக்கொடுப்பார்கள். அதுபோலத்தான் தாழ்வான குடியில் அல்லது கடைப்பகுதியில் பிறந்தாலும் கல்வி கற்ற, அறிவில் சிறந்தவரைச் சான்றோர்கள் உயர்வான இடத்தில் வைத்துப் போற்றுவார்கள்.. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பது உண்மையில் அவரவர் பிறப்பினால் வருவதில்லை என்பதை,

*“களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்*
*விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;*
*கடைநிலத்தோர் ஆயினும், கற்றறிந் தோரைத்*
*தலைநிலத்து வைக்கப் படும்”*

*(நாலடியார், கல்வி அதிகாரம். பா.எண்.133)*

என்னும் நாலடிப் பாடலடிகள் எடுத்துரைக்கனிறன. உயர் கல்வி கற்றால் வறுமையில் உள்ளவர்களும் நல்ல நிலைமைக்குச் செல்லமுடியும் வறுமையை ஒழிக்கமுடியும். நாலடியார் கற்றவர்களே உண்மையில் உயர்ந்தவர்கள். கல்லாதவர்களே தாழ்ந்தவர்கள் என்னும் அறத்தினை வலியுறுத்துகிறது. வள்ளுவரின் கருத்தினையே நாலடியாரும் ஒத்திசைகின்றார். இதனை,

*“தோணி இயக்குவான், தொல்லை வருணத்துக்*
*காணின் கடைப்பட்டான் என்றிகழார;– காணாய்!*
*அவன்றுணையா வாறுபோயற்றே, நூல்கற்ற*
*மகன்றுணையா நல்ல கொளல்”.*

*(நாலடியார், கல்வி அதிகாரம். பா.எண்.136)*

அதிக வெள்ளப்பெருக்குடைய ஆற்றைக் கடக்க வேண்டும் என்றால் தோணி செலுத்துபவன் எந்தச்சாதியாக இருந்தாலும் அவனை இகழாமல் அவனது துணைகொண்டு ஆற்றினைக் கடப்பதுதான் புத்திசாலித்தனம். இங்கு சாதியைப் பார்க்காமல் தன் உயிரைப் பாதுகாப்பாக அக்கரைக்குக் கொண்டு சேர்க்கும் அவனது திறமையைத்தான் பார்க்கவேண்டும். அதுபோலத்தான் நல்ல நூற்களைக் கற்றவன் தாழ்ந்த சாதியாக இருந்தாலும் அவன் கற்றுத்தேர்ந்த நல்ல நூலின் பொருளை நாம் அவன் துணைகொண்டு கற்க வேண்டும் என்கிறார். கற்பதற்கும் கற்றுக் கொள்வதற்கும் யாரும் சாதி பார்க்கக்கூடாது என்ற தொலைதூரச் சிந்தனையை வள்ளுவமும் நாலடியாரும் ஒத்திசைந்து செல்வதை அறிந்துகொள்ள முடிகிறது.

**தொடர் கற்றலும் அறிவும்**

மணற்கிணற்றினைப் பண்டைய காலங்களில் ஆற்றுப்படுக்கையிலுள்ள மணற்பகுதில் குடிநீருக்காக மக்கள் தோண்டுவார்கள். அப்போது, தொடர்ச்சியாகத் தோண்டத்தோண்ட நீர் வந்துகொண்டேயிருக்கும். அதனைப்போன்றுதான் நாம் தொடர்ச்சியாக படிக்கப்படிக்க அறிவு பெருகும் என்ற நடப்பியலை எளிமையான உவமையின் வாயிலாக வள்ளுவம் நமக்கு எடுத்துரைக்கின்றது. இதனை,

*“தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தக்குத்*
*கற்றனைத் தூறும் அறிவு”.*

*(பொருட்பால். கல்வி அதிகாரம்.40. குறள்.396)*

என்னும் குறட்பா சான்றுபகர்கின்றது.

**அன்னப்பறவையாகக் கற்றல்**

இவ்வுலகில் மனிதர்கள் படிக்கவேண்டியவை எவ்வளவோ இருக்கிறன. ஆனால், மனிதர்களுக்கு ஆயுள் குறைவாகத்தான் இருக்கின்றது. குறைவான ஆயுளில் பலவகையான நோய்கள் மனிதனை வந்தடைகின்றன. அதனால், தமக்குத் தேவையானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து எப்படி அன்னப்பறவை உண்கின்றதோ அதனைப்போன்று மனிதர்களும் தேவையில்லாத நூல்களை விட்டுவிட்டுத் தேவையான நூல்களை மட்டும் கற்க வேண்டும் என்ற நடப்பியலை உவமையின் வாயிலாக நாலடியார் சுட்டுகின்றார். இதனை,

*“கல்வி கரையில; கற்பவர் நாள்சில;*
*மெல்ல நினைக்கின், பிணிபல;– தெள்ளிதின்*
*ஆராய்ந் தமையுடைய கற்பவே, நீர்ஒழிய*
*பாலுண் குருகிற் றெரிந்து”*

*(நாலடியார், கல்வி அதிகாரம். பா.எண்.135)*

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. எனவே, அன்னப்பறவை போன்று தேவையில்லாததை ஒதுக்கிவிட்டுத் தேவையானதை மட்டும் மனிதர்கள் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை நாலடியார் வலியுறுத்துவதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**கல்வியின் இன்றியமையாமை**

மனிதர்களுக்குப் பொதுவாக ஏழு பிறப்பு இருக்கிறது என்பது ஒரு நம்பிக்கை. அப்படி ஏழு பிறவி என்பது இருக்கும்பொழுது ஒருவன் தான் அப்பிறவியில் கற்ற அக்கல்வியானது அவனுக்கு ஏழு பிறப்பிற்கும் சென்று பயனைத்தரும் என்னும் கல்வியின் சிறப்பினை உணர்ந்த வள்ளுவர்,

*“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து”*

*(பொருட்பால். கல்வி அதிகாரம்.40. குறள்.398)*

என்னும் குறட்பா மூலம் நடப்பியலையும் கல்வி கற்றலின் முக்கியத்துவத்தையும் உலகிற்கு எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது.

**கற்றவரோடு சேர்தல்**

நல்ல மணம் உடைய பாதிரிப்பூவினை மண்பானைத் தண்ணீரின் போடும் போது தண்ணீரும் தண்ணீருள்ள மண்பானையும் மணம்பெறுகிறது என்ற எளிதான உவமையினை எடுத்துரைத்து மற்றுமொரு உவமையினை நாலடியாார் புப்படுத்துகிறார். இதனை,

*"கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்,*
*நல்லறிவு நாளுந் தலைப்படுவர் – தொல்சிறப்பின்*
*ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு*
*தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"*

*(கல்வி அதிகாரம். பா.எண்.139)*

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. ஒத்த மனநிலையுடைய மனிதர்கள் ஒன்று சேர்வார்கள் என்பது இயல்பானது. ஆனால், இதற்கு மாறாக படிக்காதவர்கள் படித்தவர்களோடு நட்புக் கொள்ளும்போது பாடிக்காதவர்களும் படிப்பதற்குத் தலைப்படுவார்கள் என்ற அறிவியலைப் புலப்பதுகிறார். இதனையே, திருவள்ளுவரும் எடுத்துரைக்கின்றார். இதனை,

*"நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு*
*இனத்தியல்பது ஆகும் அறிவு"*

*(சிற்றினம் சேராமை அதிகாரம். குறள்.452)*

என்னும் குட்பா சான்று பகர்கின்றது. மேலும், இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாகத் தமிழ்ப் பழமொழியும்,

*"பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்"*

*(தமிழ்ப் பழமொழி)*

என்னும் நடப்பியலை எடுத்துரைக்கின்றது. நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லவர்களாக மாற்றம் பெற முடியும் என்று திருவள்ளுவரும் நாலடியாரும் அறச்சிந்தனையை உணர்த்துகின்றனர்.

**முடிவுரை**

1. நல்ல நூல்கல்வியைக் கற்று அதன்படி வாழடிவண்டும் அதுவே அழகு என்று வள்ளுவம் கூறுகின்றது. நாலடியும் கல்விதான் அழகு நிலையில்லாத அழகான உடலுறுப்புகள் உண்மையான அழகில்லை என்கின்றது.
2. கல்வி மனிதனுக்குக் கண்போன்றது என்பது வள்ளும். நாலடி அறியாமையைப் போக்கக்கூடியது கல்வி ஒன்றே வேறொன்றும் இல்லை என்று உறுதிபடக்கூறுகிறது. அதனால் நாலடியும் கல்வி கண் என்பதை அறியமுடிகிறது.
3. தொடர்ச்சியாக கற்றால் அறிவானது பெருகும் என்கிறது வள்ளுவம். வாழ்நாள் குறைவாக இருக்கிறது. குறைவான வாழ்நாளில் நோயும் வந்துவிடுகிறது. அதனால் தொடர்ச்சியாக விரைவில் கற்றவேண்டியதை கற்றவேண்டும் என்று நாலடியும் கூறுகிறது.
4. கல்வி கற்பதற்குச் சாதி தடையாக இருக்கக்கூடாது என்கிறது வள்ளுவம். இதனையே ஒத்திசைகின்றது நாலடி.
5. மழைநீரானது சேரும் நிலத்தின் தன்மையை அடையும் என்பது வள்ளுவம். இதனைப்போலத்தான் நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லவர்களாக மாறுவர் என்ற அறத்தினை நாலடியும் எடுத்துரைக்கின்றது.
6. திருக்குறள் கல்வி அதிகாரத்தில் திருவள்ளுவரும் நாலடியார் கல்வி அதிகாரத்தில் சமண முனிவர்களும் அறக் கருத்துக்களில் ஒத்திசைந்து செல்வதை ஆய்வின் அடிப்படையில் அறிந்துகொள்ளமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்(References)**


1. அடைக்கலசாமி, எம். ஆர், தமிழ் இலக்கிய வரலாறு. கழக வெளியீடு, சென்னை-18, முதற் பதிப்பு1969.
2. ஆசிரியர் பலர், சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம், தொகுதிகள் – 22, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை 600 050, முதற்பதிப்பு.2024.
3. சிற்பி பாலசுப்பிரமணியம், கவிஞர்., திருக்குறள், தாமரை பதிப்பகம், சென்னை-600050, அக்.2012,
4. தமிழண்ணல், உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113, முதற்பதிப்பு 2004.
5. புலியூர்கேசிகன் (உ.ஆ)., நாலடியார், சாரதா பதிப்பகம், சென்னை-600014.
6. Wikipedia.org.